# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி. ஏ. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 4 ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.56/2019–ல் இ.ம.எண். 2/2022**

1. கமலம்
2. தண்டபாணி
3. கணேசன்
4. தாமோதரன்
5. வெள்ளையம்மாள்
6. மனோகரன் என்ற மயில்சாமி

.... மனுதாரர்கள் /வாதிகள்

/ எ தி ர் /

1. காளியம்மாள்
2. சங்கப்பிள்ளை
3. கந்தசாமி
4. சரசு
5. முத்துக்கண்ணு (எ) முத்தம்மாள்
6. பாக்கியம்
7. சுந்தரம் (எ) சுந்தரம்மாள்
8. நாச்சம்மாள் (எ) ராஜம்மாள்

.... எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 19.10.2024 ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு M. ராமலிங்கம், அவர்களும், 1 ம் எதிர்மனுதார்/1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஜீவரத்தினம், அவர்களும் ஆஜராகியும், 2 முதல் 8 ம் எதிர்மனுதாரர்கள்/2

முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு T. சிவச்சந்திரன், அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை ஏதுமில்லை என மனுவில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால் அசல் வழக்கு எண் 56/2019–ல் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு சொத்து மதிப்பு, எதிர்கால பின் நஷ்டி, சுவாதீனம் மற்றும் கூடுதல் சொத்து விவரங்கள் ஆகியவற்றை சேர்த்து பிராதினை திருத்திக் கொள்ள அனுமதியளிக்கக்கோரி உவிமுச கட்டளை 6 விதி 16 மற்றும் 17 மற்றும் பிரிவு 151ன் படியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **1 முதல் 3, 5 மற்றும் 6 மனுதாரர்கள்/வாதிகளால் ஏற்கப்பட்டு 4ம் மனுதாரர்/4ம் வாதியால் மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் பின்வருமாறு** :–

தாவாச் சொத்தும், இதர சொத்துக்களும் 1ம் பிரதிவாதியின் முன்னோர் வீரக்கவுண்டர் மகன்களான பொன்னாகவுண்டர், ச.பொன்னாக்கவுண்டர், குழந்தைவேல் கவுண்டர் மகன் ராமசாமி கவுண்டர்,, முத்துவீரக்கவுண்டர் மகன் மயிலகவுண்டர்4, பிரக்கிரியா கவுண்டர், ஆக ஐந்து பேர்களுக்கு பொதுப்

பாத்தியப்பட்டு அவர்கள் பிரித்து அனுபவித்ததில் தாவா சொத்து 188/26 ஆதியில் கிணறாக பொதுவில் வைத்து அனுபவித்து வந்துள்ளனர். பொன்னாக்கவுண்டர் 2/5 பாகத்தை மயிலாகவுண்டர், ராமசாமி கவுண்டர் இருவரும் 12.2.1960ம் தேதிய கிரையப்படி விற்று, மேற்படியார் மேற்படி தேதியில் பெற்றிருந்த மறு கிரைய பாத்திய உரிமையை 30.5.1962ல் relinquish செய்து கொடுத்துவிட்டதில் 188/26 சொத்தில் வீரக்கவுண்டர் குமாரர் பொன்னாக்கவுண்டருக்கு யாதொரு பாத்தியமோ, உரிமையோ, அனுபவமோ கிடையாது. இந்த நிலையில் 4ம் மனுதாரருக்கு கிரையம் விற்ற கந்தசாமி மேற்படியார் கிரையம் பெற்ற 3 செண்ட் சொத்தில் வீடு கட்டியதில் அதை பொன்னாகவுண்டர் மனைவி மாரியம்மாள் மகள் காளியம்மாள் தடை இடைஞ்சல் செய்ததில் கந்தசாமி வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.164/2000-ல் நிரந்த உறுத்துக்கட்டளை கோரி வழக்கிட்டு கட்டிடம் கட்டி முடித்துவிட்டார். கந்தசாமிக்கு 3 செண்ட் கிரைய பாத்தியம் என்பதை மாரியம்மாள் ஒப்புக் கொண்டுள்ளார். அதன்பின் பொன்னர்கவுண்டர் மனைவி மாரியம்மாள் O.S.No. 250/2000-ல் 4/15 பாகம் கோரி வழக்கிட்டும் O.S.No.22/2001ல் கந்தசாமி கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கிட்டதில், மின் இணைப்பு வழங்கப்பட்டதும், மேற்படி O.S.No.22/2001 வழக்கு தள்ளுபடிக்கு விட்டுவிட்டார். கந்தசாமியும் கட்டிடம் கட்டி மின் இணைப்பு பெற்றபின் மேற்படியார் வழக்கிட்ட O.S.No.164/2000 வழக்கை தள்ளுபடிக்கு விட்டுவிட்டார். மேற்படி வழக்கில் எல்லா பாத்தியஸ்தர்களும் சேராத நிலையில் கந்தசாமி

தோன்றா தரப்பினராக இருந்ததில் O.S.No.250/2000 ல் பாத்தியம் சம்பந்தமாக மாரியம்மாளுக்கு எந்த தஸ்தாவேசும் சாட்சியமும் இல்லாத நிலையில் ஒருதலைபட்ச தீர்ப்பு சட்டப்படி இல்லாமல் ஏற்பட்டுள்ளது. ஆனால் மேற்படி வழக்கில் party களாக சேர்க்கப்படாத நபர்கள் கட்டிடம் கட்டி 2007 லும், 2009 லும் கிரையம் விற்றதில் 4 முதல் 6 வாதிகள் கட்டிடங்களை கிரையம் பெற்றபடி அனுபவித்து வந்தனர். 30.5.1962 ம் தேதி பொன்னாகவுண்டர் மறு கிரைய பாத்திய விடுதலைக்கு பிறகு இதர பாகஸ்தர்களும், கிரையம் பெற்றவர்களும் அவரவர் பாகப்படி அனுபவித்து வந்ததில் கிணர் மூடப்பட்டு 30.5.1962 ல் கிரையம் பெற்ற வீரபத்திரன் செட்டியார் 14.10.1965 ல் கிரையம் பெற்ற சங்கன் பூசாரி மற்றும் இதர பாகஸ்தர்கள் பெயரில் 4.57 ஹெக்டேர் 25.11.1982 ல் T.R.1202/82 ல் 1246 ல் பட்டா ஏற்பட்டும் பின் சப்டிவிஷன் 188/26 என ஏற்பட்டு 1659 கூட்டுப்பட்டா ஏற்பட்டது. 30.5.1962 ல் கிரையம் பெற்ற வீரபத்திரன் செட்டியார் தான் கிரையம் பெற்ற சொத்தில் ஒரு பகுதியை 4 ம் மனுதாரரரின் கிரையதாரரான கந்தசாமி 1.11.1995 ல் கிரையம் பெற்றும் மற்ற பாகஸ்தர்கள் வெள்ளையம்மாள், மயில்சாமிக்கு கட்டிடம் கட்ட 28.10.2007 ல் கிரையம் விற்றும் கந்தசாமி மேற்படியார் 3 செண்ட் இடத்தில் கட்டிய கட்டிடத்தை 4 ம் மனுதாரருக்கு 13.3.2009 ம் தேதி கிரையம் விற்றும், அதன்படி 188/26 சப்டிவிசன் 188/26A, 26B, 26C, 26(1) என ஏற்பட்டும் தனிப்பட்டாக்கள் ஏற்பட்டும், Town Panchayat Plan Approval செய்து கட்டிடம் கட்ட அனுமதித்து வரி விதிப்பும் 4 ம் மனுதாரருக்கு இதர பாகஸ்தர்கள் பெயரில் ஏற்பட்டும், மின்

இணைப்புகள் ஏற்பட்டும் அனுபவித்து வரப்பட்டுள்ளது. இந்நிலையில் தாவாச் சொத்தில் கிரையம் விற்ற பின் எந்த பாத்தியமும் அனுபவமும் இல்லாத வீரக்கவுண்டர் குமாரர் பொன்னாகவுண்டர் மனைவி 188/26 ல் கட்டிடங்கள் இருப்பதை காட்டாமல் காலியிடமாக காட்டி பொய்யாக 4/15 பாகம் காலியிடத்தில் பாகம் கோரி வழக்கிட்டு எல்லா பாகஸ்தர்களை Party களாக சேர்க்காமல் தன் கணவர் 1960, 1962 கிரையங்களை மறைத்து நீதிமன்றத்தை ஏமாற்றியும், கூட்டுச் சேர்ந்து முதல்நிலைத் தீர்ப்பாணை பெற்றுள்ளார் , அதன்பின் I.A.No.251/2005 ல் கிரையம் பெற்ற 4 ம் மனுதாரரையும், வெள்ளையம்மாள், மயில்சாமி ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் மனுதாரர்கள் கிரையம் பெற்ற கட்டிடங்களை துலக்காமல் காலியிடமாக காட்டி நீதிமன்ற ஆணையரை ஏமாற்றி, கட்டிடம் இருந்ததை குறிப்பிடாமல், நீலநிறப் பகுதியை காலியிடம் எனக் காட்டி, E.P.No.11/2018 ல் ஒப்படைப்பு மனுச் செய்து, தாவா வழக்கு O.S.No.56/2019 நிலுவையில் உள்ள போது ஒப்படைப்பு பெற்றுள்ளார்கள். மனுதாரர்கள் பிராது சொத்து விபரத்தில் 1 ம் பிரதிவாதியை ஏமாற்றி பெற்ற சொத்து விபரத்தை பொதுவாக காட்டியிருப்பதில் 4 ம் வாதி கிரையம் பெற்று அனுபவித்த பகுதியையும், கட்டிடத்தையும் A Schedule ஆக காட்டியும், வெள்ளையம்மாள் கிரையம் பெற்று அனுபவித்த பகுதி சொத்தை B Schedule ஆக துலக்கியும் 6 ம் வாதி மயில்சாமி சொத்தை C Schedule ஆக காட்டியும், 1 முதல் 3 வாதிகள் சொத்தை D Schedule ஆக காட்டியும் அவரவர்கள் சொத்தை சுவாதீனம் கோரிப்பெற வேண்டியுள்ளதாலும், அதுவரை ஏற்படக்கூடிய எதிர்கால

இழப்பீட்டினை பெற பரிகாரம் கோரவும் உரிய வகையில் பிராது திருத்தம் செய்யவேண்டியுள்ளது. எனவே விளம்புகை பரிகாரத்துடன் வாதிகள் அவரவர்கள் சொத்தை சுவாதீனம் பெறத்தக்க வகையில் சொத்து விபரத்தையும், பிராது கோரிக்கைகளை சேர்த்து நீதிமன்றக் கட்டணம் கணக்கிட்டு செலுத்தி பிராது திருத்தம் செய்யவேண்டியுள்ளது அவசியமாக உள்ளது. எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

3) <u>**1ம்** எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–</u>

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள திருத்தல் மனு தாவா வழக்கின் தன்மையையும், வழக்கு மூலத்தையும் மாற்றுவதால் தாவா திருத்தல் மனு சட்டப்படி செல்லாது. 1ம் எதிர்மனுதாரர் மனு சொத்தை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூரில் E.P.No.11/2018 ல் 2.3.2019 ம் தேதிய உத்தரவுப்படி நீதிமன்றம் மூலம் சுவாதீனம் பெற்று அனுபவித்து வருகிறார். அதன் பின் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ள வாதிகள் தாவா சொத்து தங்கள் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டு தற்போது இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது 4ம் மனுதாரர் /4ம் வாதி ஒப்படைப்பு பெற்றதாகவும், அதனால் சுவாதீனப் பரிகாரம் கோரி வழக்கை திருத்தவேண்டும் என்றும், 3 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கின் விசாரணை துவங்கிய பின்னர் தாக்கல் செய்துள்ள இம்மனு காலவரம்பு சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. உண்மை சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்துள்ள இம்மனு

நிலைநிற்கத்தக்கதல்ல. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வேடசந்தூரில் O.S.No.250/2000 ல் 6.12.2001 ம் தேதி ஏற்பட்ட பாகப்பிரிவினைக்கான முதல்நிலைத் தீர்ப்பாணையின்படி இ.ம.எண் 251/2005 ல் 29.11.2017 ம் தேதி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு , நி.ம.எண் 11/2018 ல் 2.3.2018 ம் தேதி ஒப்படைப்பு உத்தரவு ஏற்பட்டு, பாகச் சொத்து சுவாதீனம் 1 ம் எதிர்மனுதாரருக்கு சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அ.வ.எண் 250/2000 நிலுவையில் இருக்கும்போது இவ்வழக்கின் 3 ம் பிரதிவாதியிடம் 4 ம் வாதி தாவாச் சொத்தின் ஒரு பகுதியைப் பொறுத்து 13.3.2009 லும், 5,6 வாதிகள் 4 முதல் 8 பிரதிவாதிகளிடம் 18.10.2007 தேதியிலும் கிரைய ஆவணம் உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அ.வ.எண் 250/2000-ல் யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்பது அறுதியிட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வாதிகள் கிரையம் பெற்றதாகச் சொல்லும் பாகச் சொத்துக்கள் உ.வி.மு.ச பிரிவு 11-ன் கீழ் தற்போது சுவாதீனம் கோர வாதிகளுக்கு உரிமையில்லை. நி.ம.எண் 11/2018-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் 4 ம் மனுதாரரால் உவிமுச பிரிவு 47-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடியானதால், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை C.R.P.(MD) No. 931/2019 and C.M.P.(MD) 5326/2019 சீராய்வு மனுக்கள் 27.8.2019 ல் மேல்நடத்த வலியுறுத்தாமல் தள்ளுபடிக்கு விடப்பட்டுள்ளது. எனவே, நி.ம.எண் 11/2018-ல் 29.3.2019 ல் ஏற்பட்ட உத்தரவு இறுதியானது. நி.ம.எண் 11/2018-ல் ஏற்பட்ட ஒப்படைப்பை ஆட்சேபிக்கும் வாதிகள் உ.வி.மு.ச. பிரிவு 47 அல்லது உ.வி.மு.ச. கட்டளை 21

விதி 10 ஆகியவற்றின் கீழ் மனு தாக்கல் செய்யமுடியுமேயொழிய தாவா வழக்கு தாக்கல் செய்யவும், சொத்தின் சுவாதீனம் கோரவும் சட்டப்படி எந்த உரிமையும் இல்லை. சர்வே எண் 188/26–ல் 24 செண்ட் சொத்துக்கள் வாதிகளுக்குப் பாத்தியப்பட்டது என விளம்புகை கோரி வழக்கு தாக்கல் செய்துவிட்டு, அ,வ,எண் 108/2019 ல் 1 மற்றும் 4 வாதிகளாக இருந்து பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதிலிருந்தே வழக்கில் உண்மைத்தன்மை இல்லை என்பதும், உண்மை சங்கதிகளை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் நன்கு தெரிய வரும். எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) இரு தரப்பிலும் சாட்சியச், சான்றாவணங்கள் ஏதும் முன் வைக்கப்படவில்லை.

6) **பிரச்சனைக்குரிய தீர்வு**

மனுதாரர்கள் தரப்பில் தாவாச் சொத்தும், இதர சொத்துக்களும் 1ம் பிரதிவாதியின் முன்னோர் வீரக்கவுண்டர் மகன்களான பொன்னாகவுண்டர், ச.பொன்னாக்கவுண்டர், குழந்தைவேல் கவுண்டர் மகன் ராமசாமி கவுண்டர், முத்துவீரக்கவுண்டர் மகன் மயிலகவுண்டர், பிரக்கிரியா கவுண்டர், ஆக ஐந்து பேர்களுக்கு பொதுப் பாத்தியப்பட்டு அவர்கள் பிரித்து அனுபவித்ததில் தாவா சொத்து சர்வே எண் 188/26 ஆதியில் கிணறாக பொதுவில் வைத்து அனுபவித்து வந்துள்ளதாகவும், பொன்னாக்கவுண்டர் 2/5 பாகத்தை மயிலாக்

கவுண்டர், ராமசாமி கவுண்டர் இருவரும் 12.2.1960ம் தேதிய கிரையப்படி விற்று, மறு கிரைய பாத்திய உரிமையை 30.5.1962ல் விடுவித்து விட்டதால் சர்வே எண் 188/26 சொத்தில் வீரக்கவுண்டர் குமாரர் பொன்னாக்கவுண்டருக்கு யாதொரு பாத்தியமோ, உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றும், இந்த நிலையில் 4ம் மனுதாரருக்கு கிரையம் விற்ற கந்தசாமி அவர் கிரையம் பெற்ற 3 செண்ட் சொத்தில் வீடு கட்டியதில் அதை பொன்னாகவுண்டர் மனைவி மாரியம்மாள் மகள் காளியம்மாள் தடை இடைஞ்சல் செய்ததில் கந்தசாமி வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.164/2000–ல் நிரந்த உறுத்துக்கட்டளை கோரி வழக்கிட்டு கட்டிடம் கட்டிவிட்டதால் கந்தசாமிக்கு 3 செண்ட் கிரைய பாத்தியம் என்பதை மாரியம்மாள் ஒப்புக் கொண்டுள்ளதாகவும், கந்தசாமியும் கட்டிடம் கட்டி மின் இணைப்பு பெற்றபின் மேற்படியார் வழக்கிட்ட O.S.No.164/2000 வழக்கை தள்ளுபடிக்கு விட்டுவிட்டதாகவும், பொன்னாகவுண்டர் மனைவி மாரியம்மாள் O.S.No.250/2000–ல் 4/15 பாகம் கோரி வழக்கிட்டும், O.S.No.22/2001ல் கந்தசாமி கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கிட்டதில், மின் இணைப்பு வழங்கப்பட்டதும், மேற்படி O.S.No.22/2001 வழக்கு தள்ளுபடிக்கு விட்டுவிட்டதாகவும், மேற்படி வழக்கில் எல்லா பாத்தியஸ்தர்களும் சேராத நிலையில் கந்தசாமி தோன்றா தரப்பினராக இருந்ததில் O.S.No.250/2000ல் பாத்தியம் சம்பந்தமாக மாரியம்மாளுக்கு எந்த தஸ்தாவேசும் சாட்சியமும் இல்லாத நிலையில் ஒருதலைபட்ச தீர்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும, மேற்படி வழக்கில்

தரப்பினர்களாக சேர்க்கப்படாத நபர்கள் கட்டிடம் கட்டி 2007 ம் ஆண்டிலும், 2009 ஆண்டிலும் கிரையம் விற்றதில் 4 முதல் 6 வாதிகள் கட்டிடங்களை கிரையம் பெற்றபடி அனுபவித்து வந்ததாகவும். 30.5.1962 ம் தேதி பொன்னாகவுண்டர் மறு கிரைய பாத்திய விடுதலைக்கு பிறகு இதர பாகஸ்தர்களும், கிரையம் பெற்றவர்களும் அவரவர் பாகப்படி அனுபவித்து வந்தததாகவும், 30.5.1962 ல் கிரையம் பெற்ற வீரபத்திரன் செட்டியார் தான் கிரையம் பெற்ற சொத்தில் ஒரு பகுதியை 4 ம் மனுதாரரரின் கிரையதாரரான கந்தசாமி 1.11.1995 ல் கிரையம் பெற்றும், கந்தசாமி தனது 3 செண்ட் இடத்தில் கட்டிய கட்டிடத்தை 4 ம் மனுதாரருக்கு 13.3.2009 ம் தேதி கிரையம் விற்றும், அதன்படி 188/26 சப்டிவிசன் 188/26A, 26B, 26C, 26(1) என ஏற்பட்டும் தனிப்பட்டாக்கள் ஏற்பட்டு அனுபவித்து வரப்பட்டதில் தாவாச் சொத்தில் கிரையம் விற்ற பின் எந்த பாத்தியமும் அனுபவமும் இல்லாத வீரக்கவுண்டர் குமாரர் பொன்னாகவுண்டர் மனைவி சர்வே எண் 188/26 ல் கட்டிடங்கள் இருப்பதை காட்டாமல் பொய்யாக காலியிடத்தில் 4/15 பாகம் கோரி வழக்கிட்டு எல்லா பாகஸ்தர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் தன் கணவரின் 1960, 1962 கிரையங்களை மறைத்து நீதிமன்றத்தை ஏமாற்றியும், கூட்டுச் சேர்ந்து முதல்நிலைத் தீர்ப்பாணை பெற்றுள்ளதாகவும், அதன்பின் I.A.No.251/2005 ல் கிரையம் பெற்ற 4 ம் மனுதாரரையும், வெள்ளையம்மாள், மயில்சாமி ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் மனுதாரர்கள் கிரையம் பெற்ற கட்டிடங்களை துலக்காமல் காலியிடமாக காட்டி நீதிமன்ற ஆணையரை

ஏமாற்றி, கட்டிடம் இருந்ததை குறிப்பிடாமல், நீலநிறப் பகுதியை காலியிடம் எனக் காட்டி, E.P.No.11/2018 ல் ஒப்படைப்பு மனுச் செய்து, தாவா வழக்கு O.S.No.56/2019 நிலுவையில் உள்ள போது ஒப்படைப்பு பெற்றுள்ளதாகவும், 4 ம் வாதி கிரையம் பெற்று அனுபவித்த பகுதியையும், கட்டிடத்தையும் A Schedule ஆக காட்டியும், வெள்ளையம்மாள் கிரையம் பெற்று அனுபவித்த பகுதி சொத்தை B Schedule ஆக துலக்கியும் 6 ம் வாதி மயில்சாமி சொத்தை C Schedule ஆக காட்டியும், 1 முதல் 3 வாதிகள் சொத்தை D Schedule ஆக காட்டி அவரவர்கள் சொத்தை சுவாதீனம் கோரிப்பெற வேண்டியுள்ளதாலும், அதுவரை ஏற்படக்கூடிய எதிர்கால இழப்பீட்டினை பெற பரிகாரம் கோரவும் உரிய வகையில் பிராது திருத்தம் செய்யவேண்டியுள்ளதாகவும், விளம்புகை பரிகாரத்துடன் வாதிகள் அவரவர்கள் சொத்தை சுவாதீனம் பெறத்தக்க வகையில் சொத்து விபரத்தையும், பிராது கோரிக்கைகளை சேர்த்து நீதிமன்றக் கட்டணம் கணக்கிட்டு செலுத்தி பிராது திருத்தம் செய்யவேண்டியுள்ளது அவசியமாக உள்ளதென எடுத்துரைக்கப்பட்டது.

7) 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை ஏதுமில்லை என மேற்குறிப்பு செய்துள்ளார் .

8) 1 ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வேடசந்தூரில் O.S.No.250/2000 ல் 6.12.2001 ம் தேதி ஏற்பட்ட பாகப்பிரிவினைக்கான முதல்நிலைத் தீர்ப்பாணையின்படி இ.ம.எண் 251/2005 ல் 29.11.2017 ம் தேதி இறுதிநிலை

தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு , நி.ம.எண் 11/2018 ல் 2.3.2019 ம் தேதி ஒப்படைப்பு உத்தரவு ஏற்பட்டு, பாகச் சொத்து சுவாதீனம் 1ம் எதிர்மனுதாரருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், 3 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கின் விசாரணை துவங்கிய பின்னர் தாக்கல் செய்துள்ள இம்மனு காலவரம்பு சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அ.வ.எண் 250/2000 நிலுவையில் இருக்கும்போது இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியிடம் 4ம் வாதி தாவாச் சொத்தின் ஒரு பகுதியைப் பொறுத்து 13.3.2009 ம் தேதியிலும், 5,6 வாதிகள் 4 முதல் 8 பிரதிவாதிகளிடம் 18.10.2007 தேதியிலும் கிரைய ஆவணம் உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அ.வ.எண் 250/2000–ல் யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்பது அறுதியிட்டு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வாதிகள் கிரையம் பெற்றதாகச் சொல்லும் பாகச் சொத்துக்கள் உ.வி.மு.ச பிரிவு 11–ன் கீழ் தற்போது சுவாதீனம் கோர வாதிகளுக்கு உரிமையில்லை எனவும், நி.ம.எண் 11/2018–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் 4ம் மனுதாரரால் உவிமுச பிரிவு 47–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை C.R.P.(MD) No. 931/2019 and C.M.P.(MD) 5326/2019 சீராய்வு மனுக்கள் 27.8.2019 ல் மேல்நடத்த வலியுறுத்தாமல் தள்ளுபடிக்கு விடப்பட்டுள்ளது என்றும், எனவே, நி.ம.எண் 11/2018–ல் 29.3.2019 ல் ஏற்பட்ட உத்தரவு இறுதியானது என்றும், நி.ம.எண் 11/2018–ல் ஏற்பட்ட ஒப்படைப்பை ஆட்சேபிக்கும் வாதிகள் உ.வி.மு.ச. பிரிவு 47 அல்லது உ.வி.மு.ச. கட்டளை 21 விதி 10 ஆகியவற்றின் கீழ் மனு தாக்கல்

செய்யமுடியுமேயொழிய தாவா வழக்கு தாக்கல் செய்யவும், சொத்தின் சுவாதீனம் கோரவும் சட்டப்படி எந்த உரிமையும் இல்லை எனவும், சர்வே எண் 188/26–ல் 24 செண்ட் சொத்துக்கள் வாதிகளுக்குப் பாத்தியப்பட்டது என விளம்புகை கோரி வழக்கு தாக்கல் செய்துவிட்டு, அ,வ,எண் 108/2019 ல் 1 மற்றும் 4 வாதிகளாக இருந்து பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதிலிருந்தே வழக்கில் உண்மைத்தன்மை இல்லை என்பது தெரிய வரும் என்றும், எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

9) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குச் சொத்தான சர்வே எண் 188/26–ல் 0.24 செண்ட் தங்களுக்குப் பாத்தியப்பட்டதென விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி அசல் வழக்கு 56/2019 தாக்கல் செய்துள்ளதாகவும், தற்போது மேற்படி வழக்கில் 4,5 மற்றம் 6 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எதிர்மனுதாரர்களிடமிருந்து சுவாதீனம் பெறத் தக்க வகையில் சுவாதீனப் பரிகாரம் கோரியும், மேற்படி சொத்துககளை பிராதுரையில் சேர்த்தும், அவ்வாறு சுவாதீனம் பெறும் வரை மனுதாரர்களுக்கு ஏற்படக்கூடிய எதிர்கால இழப்பீட்டினை கோரியும் சொத்து மதிப்பு மற்றும் அதற்குரிய கூடுதல் நீதிமன்றக் கட்டணம் ஆகியவற்றை செலுத்தவும் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு அசல் வழக்கு எண் 56/2019 யை மேல்நடத்த அனுமதிக்கவேண்டுமென்று மனுதாரர்கள் இந்த திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள் குறிப்பிடும்

சொத்து ஏற்கனவே நி.ம.எண் 11/2018 ல் 2.3.2019 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி சுவாதீனம் பெற்று அனுபவித்து வரப்படுவதாகவும், அந்த உத்தரவிற்கு எதிரிடையாக பின்னிட்டு மனுதாரர்களுக்கு ஆதரவாக எந்த உத்தரவும் பெறப்படவில்லை என்றும், 1 ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்டு அனுபவித்து வரக்கூடிய சொத்தின் சுவாதீனத்தை தற்போது மனுதாரர்கள் சுவாதீனம் வழங்கக் கோரும் வகையில் பிராது திருத்தம் செய்ய இயலாது என்றும் எடுத்துரைக்கப்பட்டதை பரிசீலிக்கின்றபோது மனுதாரர்கள் குறிப்பிடும் சொத்துக்களின் பேரில் எதிர்மனுதாரர்களுக்கு எதிரிடையாக மனுதாரர்கள் வசம் சுவாதீனம் ஒப்படைக்கும்படியாக பரிகாரம் கோரியும் அந்த சொத்து விவரங்களை பிராதில் சேர்க்கக் கோரியும், அத்துடன் வழக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, கூடுதல் நீதிமன்றக் கட்டணம் செலுத்தவும், பின் நஷ்டி கோரியும் பிராதினை திருத்தம் செய்து கொள்வதில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. ஏனெனில், மனுதாரர்கள் கோரும் திருத்தல் மனுவில் சொல்லப்பட்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கில் சேர்க்கப்பட்டு அதன் பேரில் அசல் வழக்கில் இரு தரப்பும் கேட்டு, உரிய சாட்சிய சான்றுகள் வாயிலாக இறுதியாக தீர்மானிக்கப்படவிருப்பதால், தற்போது பிராது திருத்தம் ஏற்கத்தக்கதல்ல என வாதிட்டுள்ள 1 ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கக்கூடியதாக இல்லை. அத்துடன், இம்மனுவில் 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை ஏதுமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கோரும் திருத்தம் அசல் வழக்கில் கூடுதல் பரிகாரம் மட்டும் கோரப்படுவதால்

வழக்கின் தன்மையை மாற்றும் வகையில் இல்லையென்றும் அறிய முடிகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் மனுதாரர்களின் திருத்தல் மனு தற்போதைய நிலையில் அனுமதிக்கத்தக்கதாக இருப்பதாகவே காணமுடிகிறது. இந்நிலையில், மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரரர்களுக்கு கிடைக்கக்கத்தக்கது என்றும், அந்த வகையில் இம்மனு அனுமதிக்கப்படத்தக்கது என இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2024 ம் நாளன்று நவம்பர் திங்கள் 4 ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.11.07 16:41:21 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

இரு தரப்பிலும் சாட்சியச், சான்றாவணம் : ஏதுமில்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.11.07 16:41:28 +0530

**மு மா நீ,**
**திண்டுக்கல்.**